அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது. வடபாதி கிராமத்தில் குடிநீர் வசதி போது மானதாக உள்ளதால் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், எஸ். நரையூர் என்ற கிராமம் சேர்க்கப்பட்ட தற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வட பாதி கிராமத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் மோசமாக காணப்படுகிறது. எனவே, அந்தக் கிராமத்தையும், இந்தத் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களூர் தொகுதியில் உள்ள வடபாதி கிராமம் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஏனெனில், இந்தக் கிராமத்தில் 1980-ல் கட்டப்பட்டுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் முழுமையான அளவு குடி நீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர, இரண்டு கையிறைப் பான்களும் இயங்கிக் கொண்டு வருகின்ற காரணத்தாலே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், இந்த கிராமத்தை இப்போது சேர்ப்பதற்கு இயலாத நிலையில் இருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. ச. புரட்சிமணி : தலைவர் அவர்களே, இந்தத் திட் டத்திற்கான ஆய்வுகள் விரைவில் முடிக்கப்பட்டு, இந்த ஆண்டிலே, இதனை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக இந்தத் திட்டத்தை முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 172. திரு எஸ். ஆசைமணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

172—

நரிமணம் பகுதியை நகரியமாக்குதல்.

*1545—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

[1992 மார்ச் 11

தஞ்சாவூர் மாவட்டம், நரிமணம் பகுதியை நகரியமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

முற்பகல் 10-25

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், பனங்குடி தொழிற் பேட்டையும், அமைய இருக்கின்ற அந்த நரிமணம பகுதியை நடப்பாண்டிலே நகரியமாக அறிவிக்கின்ற செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் இதனை நகரிய மாக ஆக்குவதற்குத் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 173. திரு. ஆர். ஈஸ்வரன், திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம், திரு. ஜி. பழனிசாமி, திரு. பி. சொக்கலிங்கம், திரு. ப. கலிய பெருமாள், திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், திரு. ஏ.எம். முனிரத்தினம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

173—

மானிய விலையில் பூச்சிமருந்து மற்றும் விதைகள்.

*1029—திரு. ஆர். ஈஸ்வரன்,

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்,

திரு. ஜி. பழனிசாமி,

திரு. பி. சொக்கலிங்கம்,

திரு. ப. கலியபெருமாள்,

திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்,

திரு. ஏ.எம். முனிரத்தினம்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;